RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s2113

# தொல்காப்பிய எழுத்ததிகாரத்தில் எண்கள்

ரா. பிரபா [அ, *]

[அ] தமிழ்த்துறை, பச்சையப்பன் மகளிர் கல்லூரி, காஞ்சிபுரம்-631501, தமிழ்நாடு, இந்தியா.

# Political Contextual Structures in the Porunarattruppadai

R. Prapa [a, *]

[a] Department of Tamil, Pachaiyappa's college for women, Kancheepuram-631501, Tamil Nadu, India

* Corresponding Author: parapasairam@gmail.com

Received: 19-08-2022
Revised: 27-09-2022
Accepted: 06-10-2022
Published: 15-11-2022

Check for updates

**ABSTRACT**

Sangam literature and the books that came after gives a brief description about the history of Tamil people and the richness of Tamil language. These books are also used to explore and learn about all the values related to human life. From beginning till today humans live in ethnic groups, changes in form have occurred due to morphological development, and underlying traits have become extensions. In that way, books of Tamil literature give a clear picture about both internal and external life. At present era we are unmder government rule but earlier our ancestors were ruled by kings. A king named 'Karikal Peruvalathan' is one of the best kings and his political prowess has been composed in Porunaaratrupadai. The purpose of this article is to show that if the present government follows his good deeds and knows how he managed everything, then the government can produce a good society.

**Keywords:** Karikalan, Dominion, Government, Monarchy, Porunarattruppadai, Kaveri, Vennipor, Tomb, Ethnic group.

## முன்னுரை

மனித குலத்தின் அல்லது ஓர் இனத்தின் தொன்மையும் பெருமையையும், அவ்வினத்தின் வரலாற்றுச் சிறப்பினையும் அறிந்து கொள்ள வேண்டுமானால் அம்மக்கள் வாழ்ந்த காலம், இடம், பண்பாடு, கலாச்சாரம், மொழி ஆகிய கூறுகளின் வழியாகவே நாம் அறிந்து கொள்கிறோம். நாம் இலக்கியங்களில் வாயிலாக உய்ந்துணர்ந்துக் கொள்ளமுடியும். இவ்வகையில் ஆய்ந்தால் ஏறத்தாழ கி.மு. இரண்டாயிரம் ஆண்டுகளில் இருந்தே இலக்கியங்கள் வெளிவந்தன. இவ்வாறு வெளிவந்த இலக்கியங்களில் தமிழ்நிலம் சார்ந்த இனக்குழுக்களாக மானிடம் தழைத்தோங்கி இருந்திருக்கிறது. மானமும், வீரமும் நிறைந்த தன் மரபுகளைக் காக்கின்ற இனக்குழு சமூகத்தை சங்க இலக்கியப் பாடல்கள் படம்பிடித்துக் காட்டுகின்றன. இவ்வினக் குழுக்கள் திணை அடிப்படையில் பகுக்கப்பட்டு மானிடவியல் சிந்தனைக்கு உட்படுத்தும்போது சங்க காலத்திலு, சங்க முற்காலத்திலும், சங்க பிற்கால பிரதிபலிக்கக்கூடிய நிகழ்கால நிகழ்புகழும், தற்சங்க அரசியல் நீட்சியான சூழல்களும் அகப்புறப் பாடல்கள் மூலம் புலப்படுகின்றது. அப்புலப்பாட்டின் கட்டமைப்பின் ஒரு சிறு கூற்றாக அரசியல் சூழல் குறித்து இக்கட்டுரை அமைகிறது.

## அரசியலும், கருத்தாக்கமும்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அரிஸ்டாட்டில் மனிதனை 'அரசியல் விலங்கு' (Political animal) அரசியல் மனிதன் (Homo politics) என குறிப்பிடுகிறார். உலகின் அனைத்து வகையான சமுதாயங்களும் சமுதாய வாழ்வின் நலனைப் பேணும் பொருட்டு மக்கள் அவரவர் சமுதாயத்தில் எவ்வாறு செயல்பட வேண்டுமென்ற வழிக்ட்டு நெறிகளை ஏற்படுத்தியுள்ளன. இவ்வழிகாட்டு நெறிகள் விழுமியஙகள் (Values) நெறிமுறைகள் (norms) வழக்கடிபாடுகள் (Mores), குடிவழக்கு (folkway). வழக்கம் (Custom) பழக்கம் (habit) சட்டம் (Law) போன்ற பல நிலைகளில் அமைகின்றன. நெறிகளை உறுப்பினர்கள் மீறும்போது சமுதாயம் போற்றிக் காக்கும் மரபு முறைகளைப் பின்பற்ற வைப்பதற்காகச் சில செயல்முறைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இச்செயல் முறைகளையே 'அரசியல்' (Politics) என்னும் கருத்தாக்கத்தை அறிஞர்கள் பேசுகின்றனர் (Bhakthavatsala Bharathi, 2010).

'அரசியல்' என்னும் கருத்தாக்கத்தை முழுவதுமாக அரபு என்னும் அமைப்போடு மட்டும் தொடர்புபடுத்தாத சூழல்களில், ஒவ்வொரு திணையமைப்புக் கொண்ட நிலப்பரப்பு சார்ந்த மக்களும் அச்சமுதாய ஒருங்கை நிலைப்படுத்தும் வகையில் மரபுசார்ந்த செயற்பாடுகள், நம்பிக்கைகள் முதலியவற்றை ஒருங்குபடுத்தும் ஒரு நடவடிக்கையே அரசியல் என்னும் கருத்திற்கு உறுதுணையான பொருளாக அறிஞர்கள் செய்கின்றனர்.

சங்க இலக்கியங்கள் அரசுக்கும் அரசனுக்கும் உள்ள வேறுபாட்டை கருத்தியல் அடிப்படையில் வேறுபடுத்திப் பார்க்கக்கூடிய சூழல் நிலவுவதற்கு வாய்ப்பு குறைவாகவே இருந்திருக்கிறது. அதன் காரணம் 'மன்னராட்சி' முறையே சங்ககால மக்களுக்கு பரிச்சயமாக இருந்தது. அதன்பிறகு உயர்குடி ஆட்சியோ, மக்களாட்சியோ சங்ககால மக்களுக்கு பரிட்சயமாக இருந்துட்டு, இதுவரை நமக்கு தரவுகள் கிடைக்கவில்லை. என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். ஒரு அரசன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்ற கருத்துக்கள் சங்க இலக்கியம் முழுவதும் பரவி கிடக்கின்றன. ஒரு அரசனின் முக்கியத் தேவைகளில் ஒன்று கோட்டை என்றும் அக்கோட்டை மூலமே எதிரிகளிடம் இருந்து தன் மக்களை காத்தருள முடியும் என்ற கருத்தையும் நாம் காணமுடிகிறது. சங்ககாலம் என்பது தோரணமாக கி.மு.500 முதல் கி.பி.500 முதல் கி.பி.200 வரை கொள்ள சுட்டத்தொயில், பத்துப் பாட்டும் மூன்றாம் சங் நூல்களாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

சங்க இலக்கியங்கள், தமிழர் இனக்குழுக்களாகப் பிரிந்திருந்த காலக் கட்டத்தையும், படிப்படியாக போர்கள் மூலம் ஏற்பட்ட அரசு உருவாக்கத்தையும் ஓரளவுக்கு நமக்கு எடுத்துரைக்கின்றன. 'அரசு' என்ற கருத்துப் படிவத்தில் அல்லது வரி வடிவத்தின் பாற்பட்டு செயல்படவில்லை என்றாலும் அப்போக்கிற்கான அமைப்பு வடிவத்தில் சூழல்கள் நிலவி இருந்திருக்கின்றது. சங்க இலக்கிய அரசியல் நடவடிக்கை, ஒழுக்கநெறி சார்ந்த கருத்தியல் கோட்பாடு எனக் கொள்ளலாம். ஆனால் சங்க காலத்திற்கு சற்று பின்னே வந்த திருக்குறள் 'அரசு' மற்றும் அதன் அங்கங்கள் பற்றி ஓரளவு நமக்கு தத்துவார்ந்த அடிப்படையில் கூறியிருக்கின்றது. இவ்வடிப்படையில் சங்க இலக்கிய பத்துப்பாட்டின் ஆற்றுப்படையில் புறக்கருத்துக்களை உள்ளடக்கிய அரசனின் அரசாட்சி முறைகளைப் பற்றியே எடுத்துரைக்கின்றது (Varatharasan, 1972).

## கரிகால் பெருவளத்தான்

இவனுடைய இயற்பெயர்களாக திருமாவளவன், மாவளத்தான், இயல்தேர் வளவன், கரிகாலன் போன்றவற்றைக் கொண்டு சோழர்களின் மிக முக்கியமாதொரு மன்னனாக செயல்பட்டான். சோழர் குலத்தை ஒரு குறுநில அரசிலிருந்து காஞ்சி முதல் காவிரி வரை பரவ வழிவகுத்தான். அழகான சிறப்புமிக்க தேர்களைப் பெற்று, வளம்பொருந்திய புகழையுடைய இளஞ்சேட் சென்னியின் மகன் என்பது உண்மை. இவண் பட்டினப்பாலை, பொருநராற்றுப்படை, கலிங்கத்துப்பரணி, பழமொழி நானூறு முதலான நூல்கள் இவரது சிறப்புக்களை விளக்குகிறது. இந்நூற்களில் கரிகாலன் பற்றிய குறிப்புகள் இடம்பெற்றதோடு, பாட்டுடைத்தலைவனாக கொண்டு சங்க இலக்கியம் பத்துப்பாட்டின் புறம் சார்ந்த ஆற்றுப்படை நூலான பொருநராற்றுப்படையில் முடத்தாமக்கண்ணியரால் இயற்றப்பட்டுள்ளது. ஆனால்

பல்வேறு ஆய்வாளர்களிடமிருந்து இந்நூல்களில் இடம்பெற்றுள்ள கரிகாலன் வெவ்வேறுப்பட்டவன் என்ற தகவல்கள் நிலவுகின்றன. இம்மன்னன் ஆற்றிய அளப்பெரிய செயல்களின் வழி குறிக்கும் மன்னனின் மனிதன் வெவ்வேறு பெயர் பெற்றவன் என்றும் சிலர் அறிஞர்களும், அவ்வாதாரங்களை மறுத்து அனைத்தும் ஒருவரே என்ற கோட்பாட்டு கொள்கையும் இடம்பெறுகின்றது (Pillai, 2009).

## கரிகாலனின் சிறப்பு

1. வெண்ணிப்போரில் வெற்றியை அடைந்தது.
2. காவேரிக்கு அணைக்கட்டியது.
3. இமயமலைக்கு படை எடுத்தது.

இம்மன்னனின் பெயரே காரணப்பெயராக அமைந்தது என்று அகநானூற்று பாடல்வரி குறிப்பிடுகிறது.

'சாய்ச்சின மெய்ம்பிற பெரும் பெயர்க் கரிகால்
கலிகொள் சுற்றமொடு கரிகால் காண'

இப்பாடல் வழி நாம் உணரலாம். இவ்வரசன் தாய் வயிற்றில் இருக்கும்போதே தந்தை இறந்துவிட, பிறக்கும் முன்பே அரசுரிமைப் பெற்றவன். அக்கால இனப்பாடுகளின் வழி தலைமையுரிமை கால்வழி முறையில் அரசாட்சியை பெற்றத் தலைவன். 'தாயின் வயிற்றில் இருந்து தாயம் எய்தி' என்னும் பாடல் புலப்படுத்துகிறது (Varatharasan, 1972).

## கரிகாலனின் அரசாட்சி

நற்பெயர் சூழ்ந்த அரசனுக்கு அணிகலன்களாக சேனையின் வலிமை, குடி ஜனக்கட்டு, செல்வச்சிறப்பு, நல்ல மந்திரிகள், அயல்நாட்டு அரசர்களின் நல்லுறவு, கோட்டை கொத்தளம் பாதுகாப்புகள் ஆகிய இந்த ஆறு பகுதிகளும் சிறப்பாக அமையப்பெற்று, அச்சமற்ற தன்மை, ஏழைகளுக்கு உதவும் கொடைமனம், அரசியல் அறிவு, விடாமுயற்சி ஆகிய நான்கும் உறுப்புகளாகக் கொண்டு செயல்படுவது அரசுக்கும், அரசனுக்குரிய தகுதியாகும். இத்தகுதிகளைப் பெற்ற மன்னராகவும், அரசனாகவும் இப்பெருவளத்தான் வாழ்ந்து சிறப்பித்திருக்கிறான். இவ்வரசாட்சியானது மருத நிலத்து இனக்குழுவின் சமூக வாழ்வியல் குறித்தும் அவர்களின் நெறியினையும் பற்றியும் சூழ்ந்துள்ளது. கரிகாலனின் ஆட்சிமுறையையும் அவனது செங்கோல் தன்மையினையும் முத்தாமக் கண்ணியார் 248 அடிகளில் படம்பிடித்துக் காட்டுகிறார் (Pillai, 2009).

## படை வலிமை

பொருநர்களையும், யாழ் இசைக்கும் கூத்தர்களையும் கொண்ட படை வலிமைப்பெற்ற ஒருவனாகவும், அவர்களுக்கு இடையறவு இல்லாத புதிய வருவாயினை உடையது அவ்வூரின் தன்மை. தனது பெருஞ்சேனையுடன் வடக்குநோக்கி புறப்பட்டு இமயத்தையும் சென்று, இலங்கையும் கப்பல் பல வீரர்களுடன் சென்று வென்று தனது தோழமை ஒருவனை ஆளவிட்டு திரும்பினான் என்று கலிங்கத்துப்பரணி குறிப்புகள் இடம்பெறுகின்றது. பன்னீராயிரம் சிங்களர்களைக் கொண்டு பந்து காவேரிக்கு கட்டினான் என்பதால் இவனை பொன்னி கரை கண்ட பூபதி என்று மூவருலா சிறப்பிக்கின்றது.

## குடிகளின் மகிமை

பரிசில் பெற்று வந்து களிப்பில் செம்மார்ந்து இருந்த பொருநன், யாழ் இசைத்துக் கொண்டு வரும் பாணனைக் கண்டு யாழின் சிறப்பினைக் கூறி? அதனை இசைக்கக்கூடிய பாடினியின் ஒப்பற்ற மகிமைகளை எடுத்துரைத்து நரம்புகளைத் தழுவியும், வருரிடியும், யாழ் நரம்புகளை செறித்து வன்மை, மென்மை, பொதுமை போன்றவற்றைப் பார்த்தல் உறழ்ந்தும் என்பது ஒன்றிடை இட்டும், இரண்டிடை

இஞ்சும் தெறித்து ஆராட்டுதல் பின்பு பாட்டில் உள்ள சீர்களுக்குத் தக இசையை நிரப்புதல் போன்ற பேரறிவுடைய குடிகள் வாழ்கின்ற ஊரில் வீற்றிருக்கும் அரசனைக் கண்டு பரிசினைப் பெற்று வருவீராக என்று பொருநர் கூறுகிறார்.

"அப்பரில் பெறவரும் பாடினி,

மரல் பழுத்தன்ன மறுகுநீர் மொக்குள்

நண்பகல் அந்தி நடைஇடை விலங்கலின்,

பெடைமயில் உருவின், பெருந்தகு பாடினி"

என்ற பாடல் வரிகள் மூலம் யாழ் இசைக்கும் பாடினியை கரிகாலன் எனும் அரசனிடம் சென்று பரிசினைப் பெற்றுக்கொள் என்கிறான். பாணர் பாடும் பாட்டிற்கு ஏற்ப அவ்வழியாக செல்லும்போது அரசனின் மரபைப் போற்றி தனது அக்காட்டின் வழியாக பயணிக்கும்போது பாலை நிலத்தின் இறைவனான கொற்றவையை வழிபட்டு தன் கடமையாற்றி சென்றார். அக்குடி வழிந்த மக்கள் என்று புலப்படுத்துகிறது. அரசவைத் தோற்றமானது மூவேந்தர்களும் கூடி ஓர் அவையின் கண் அமைந்தாற்போல் இருந்தது என்கிறான் குடிக்கு தலைவனான பொருநன் (Subramaniyan, 2010).

இதனை,

"முரசு முழங்குதனை மூவருங் கூடி

அரசவை இருந்த தோற்றம் போல

பாடல் பற்றிய பயனுடை எழாஅல்

கோடியர் தலைவ! கொண்டது அறிந!" (Subramaniyan, 2010)

## கோட்டையின் அமைப்பு

சோழ நாடு கிழக்குக் கடற்கரையைச் சார்ந்து உள்ளது. அதனால் கடல் அலைகளின் ஓசை மிகுதியாக இருந்தது. பழுத்த பழங்களை உடைய மரத்தைத் தேடிச் செல்லும் பறவைகளைப் போன்று நாளும் நானும் கரிகால் பெருவளத்தான் நகரை நோக்கி சென்றேன். அவனுடைய பெரிய அரண்மனை வாசல், விரும்பிச் செல்கின்றவர்களுக்கு அடைக்கப்படாத வாசல், என் துன்பம் தீர நானும் அங்கு புகுந்தேன் என்று பாடிசைப்போன் அக்கோட்டையின் பெருமையை உணர்த்துகிறான்.

"இழுரமன் தும்மை இடனுடை வரைப்பின்

நசையுநர்த் தடையா நன்பெரு வாயில்

இசையேன்புக்கு இடும்பை தீர" (Subramaniyan, 2010)

## கொடை மனம்

கொடுப்போனது சிவக்க அவனுடைய கொடைத்திறம் இருக்க வேண்டும் என்பது அரசனின் நற்கடமைகளுள் ஒன்று. அந்நற்பண்பினைப் பெற்ற அரசனாக கரிகாலனின் விருந்தோம்பல் திறம் இருந்திருக்கிறது. இதனை பாணன் ஒருவன் கூறுகிறான் எங்களை நட்புக் கொண்டவர்களைப் போல் இருந்திட விரும்பியதை பேசி, நாங்கள் உடுத்திய ஆடையை வேர்வையில் நனைத்து, இழிநிலைக்கு கிடக்கூடிய அழுக்காக இருந்தது. அதனை நீக்கிவிட்டு பாம்பின் தோல் போன்ற மிகவும் மென்மையான பார்த்தால் இழைதெரியாத பூக்கொழிலையுடைய அழகான ஆடையை எங்களுக்கு தந்தான். அதோடு மட்டுமல்லாமல் மேகம் போன்ற கரிய கூந்தலையுடைய மகளிர் எங்களுக்குப் பொற்கலங்களில் தேறலை ஊற்றி தந்தனர். இவைகளை கொடையாகப் பெற்றுக்கொண்டு எங்கள் வழிதுன்பம் அனைத்தையும் நீக்கி மகிழ்ந்திருந்தோம். இதனை,

'வேரொடு நனைந்து, வேற்றுஇழை துழைந்த

துன்னற் சிதாஅர் துவர நீக்கி

நோக்கு நுழைகல்லா நுண்மைய, பூக்கனிந்து

அரவுஉரி அன்ன, அறுவை நல்கு

மழைஎன மருளும் மகிழ்செய் மாடத்து' (Subramaniyan, 2010)

## அயல்நாட்டு அரசர்களின் நல்லுறவு

இயல்பான வாழ்வில் பகைவரோடு நட்புறவுக் கொள்ளுதல் இயலாத ஒன்று. ஆனால் ஒரு நாட்டின் அரசனாகவோ, அரசாகவோ இருக்கும்போது பல இன்னல்கள் தவிர்த்து இன்புற வேண்டிய சூழலில் நட்புறவினை நல்கவேண்டிய காலச் சூழலுக்கு ஆட்பட வேண்டும். ஆதலால் அவர்களுக்கும் இயல்போடும், இயற்கையோடு இயைந்த வாழ்வினை அரசும், மன்னனும், மக்களும் வாழ்ந்து இனக் குழுக்களாக பிரிந்து, அவர்களுக்குள் ஓர் உறவு பரிமாற்ற நிலையையும், ஒற்றுமையையும் காணமுடிகிறது.

அரசனும், ஆளப்படும் மக்களும், பிறர் துன்பம் களைக்கும் தன்மையோடு இல்லாதோர்க்கு இடுப்பன் கொடுத்தும், சொடுக்காவிட்டல் இருப்போரிடத்து வழிகாட்டியும் ஒருவரை ஒருவன் ஆற்றியும், தேற்றியும், புகழ்ந்தும் சிறப்போடும் வாழ்ந்திருக்கிறார்கள்.

சமுதாய அமைப்பு, உறவுநிலை, பிறரை மதிப்புறு நடத்தல், பெண்களைப் போற்றி புகழ்தல், நாட்டின் வளத்தைப் பெருக்கி நாட்டுமக்களுக்கு நல்வினைப் புரிதல், 'அரசன் எவ்வழி குடிமக்களும் அவ்வழி' என்ற உயரிய நோக்கோடு செயல்படுதல், இயற்கை வளங்களைக் காத்தல், உயர்திணையல்லாத, அஃறிணையினையும் வாழ்வதற்கு வகுத்தல் போன்றவையே நல்லாட்சியில் நற்பண்பாக விளங்கியது. இதனையே இலக்கியங்களும், அச்செய்யுளில் பாடப்பட்ட பாட்டுடைத் தலைவனின் பண்பும் நமக்கு அக்கால அரசியல் சிந்தனைகளை செறிவுற விளக்குகிறது.

ஏற்றியும், போற்றத்தக்க ஒருவனாக கரிகாலன் வலம் வந்தான் என்பதும், பிற நாட்டு அரசும், அவர்களும் புகழக்கூடிய வகையில் நல்லுறவான பேணிக்காத்தான் என்பது பின்வரும் பாடல்வரிகள் உணர்த்துகிறது.

'பவ்வ மீமிசைப் பகற்கதிர் பரப்பி,

வெவ்வெஞ் செல்வன் விசும்பு படர்ந்தாக்கு

பிறந்து தவழ் கற்றதன் கொட்டு, சிறந்தநன்

நாடு செகிற் கொண்டு நாள்தோறும் பளர்ப்ப'

பண்பாடு, கலாச்சாரம் என்னுமளவில் அக்கால இனக்குழுக்களும், நிலம் சார்ந்த மற்றொரு இனக்குழுவின் மரபினையும், பழக்கத்தினையும் பின்பற்றி நல்லுறவு காத்தருளிய மாண்பு இருந்திருக்கிறது. ஒருவரை ஒருவர் புகழ்ந்து கொண்டு அந்தந்த நிலத்திற்குரிய பெருமை மற்றொரு நிலக்குழுக்கள் புகழ்ந்து, விரும்பியும், வருகைபுரிந்து அக்கால இனக்குழு சமூகம் வாழ்ந்திருக்கிறது. இதுவோடல்லாது குறிஞ்சி நில மக்கள் தேனையும், கிழங்கையும் கொடுத்து, நெய்தல் நில மக்களிடம் மீனையும், கள்ளையும் கொண்டனர். மருத டநில மக்கள் சுவையான கரும்பையும் அவலையும் கொடுத்து, மான் இறைச்சியையும் மதுவையும் பெற்று பண்டமாற்று உறவினை நிலைத்திருக்கக்கூடிய அரசாட்சியினை அக்கால அரசாட்சி முறையில் காணமுடிகிறது (Subramaniyan, 2010).

## அச்சமற்ற தன்மை

சிறுவனாக இருந்த கரிகாலனை சிறையில் அடைத்தனர். கரிகாலன் தன்போர் ஆற்றலை சிறையிலேயே வளர்த்துக் கொண்டான். பகைவர்கள் அவனைக் கொல்லும் திட்டத்தோடு சிறைக்கு தீ

வைத்தனர். தன் வீரத்தால் கரிகாலன் தீயிலிருந்து தப்பித்தான். அதில் அவன் கால் கருகியது. அதனால் அவன் கரிகாலன் ஆகி அச்சமில்லா செருக்கோடு வாழ்ந்தான் என்கிறது இப்பாடல் வரிகள்,

“அரிகால்மேல் தேர் தெடுக்கும்

ஆய்புனல் நீர் நாடன்

கரிகாலன் கால் நெருப்புற்று”

இதுமட்டுமல்லாது இன்னொரு நிகழ்வாக தனது பதினைந்து வயதில் வெண்ணிப்போரை நிகழ்த்தி வெற்றியும் கண்டு சேரனையும், பாண்டியனையும் ஒரே நேரத்தில் தோற்கடித்த ஆற்றலைக் கொண்ட கரிகாலனின் வீரம் அச்சமின்மையின் உச்சமாகும் (Subramaniyan, 2010).

“ஓங்கு இருஞ் சென்னி மேம்பட மிலைந்த

இருபெரு வேந்தரும் ஒரு களத்து அவிய

வெண்ணித் தாக்கிய வெருவரு நோன்தான்

கண்ஆர் கண்ணி கரிகால் வளவன்” (Subramaniyan, 2010)

## நல்லாட்சி

வளமுடைய குளிர்ச்சி பொருந்திய வளமோடு இம்மண்லகில் குறிறமில்லால் ஒரு குடையின் கீழ்த் தன் ஒப்பற்ற ஆணையால் சிறப்பாக ஆண்டான். அவனுடைய பார்வை கன்றைப் பெற்ற பசு பார்க்கின்ற பார்வை போன்று மிகவும், விருப்பத்தோடும் அன்போடும் பார்ப்பான். பெறுதற்கரிய பொன்கலத்தில் உங்களுக்கு உணவு தருவான். இனிய மனமுடைய கள் தெளிவையும் கொடுத்துவேண்டாம், வேண்டம் என்று சொல்லும் அளவிற்கு கொடுத்துக் கொண்டே இருந்தும், அவ்விடத்தை விட்டு நீர் விலகினால் அவனால் பொறுக்க இயலாது என வருந்திச் சொல்லுவான். சேர்ந்தவர்கள் பிரிதல் இயல்பு என்ற உலகியலை உணர்ந்த காரணத்தால் மக்களைப் பிரிவான என்ற நல்ட்சி சிறப்பினை நமக்கு எடுத்துரைக்கிறது.

‘அறனொடு புணர்ந்த திறன்அறி செங்கோல்,

அன்னோன் வாழி வென்வேற் குருசில்’ (Subramaniyan, 2010)

## நாட்டுவளம்

காவேரிக்கு கரைகட்டி அணைகட்ட எடுத்த முடிவும், அதற்கான தொழில்நுட்பத்தைக் கண்டடைந்த மேதமையும் அதைச் செய்வதற்கான உழைப்பும் விடாமுயற்சியில் வீரியம் நமக்கு புரிகிறது. அரசன் என்பவனும், அரசு என்பதும் ஒன்றிணைந்த தொழில்நுட்பத்தோடும், தீவிரமான தொலைநோக்கு பார்வையோடும் செயல்பட வேண்டும் என்பதற்கு கரிகாலனின் ஆட்சி ஆதாரமாக செயல்பட்டிருக்கிறது. வளமுடைய ஏரிகளும், நீர் இறைக்கும் ஏற்றத்தினையும் ஏற்றுமதி, இறக்குமதி காவேரிபூம்பட்டினத்தில் நிகழ்ந்ததால் கடல்வழியாக வந்த வளங்களை எல்லாம் நினைத்துப் பார்த்தால் காவேரி நாட்டிந் நெல்வளத்திற்குக் கீழாகவே அமையும், காரணம் என்னவென்றால் காவேரி நதி சூழ்ந்தநாடு சோழநாடு அதை ஆணடுவரும் கரிகாலனே இதனை,

‘அரிகாலின் கீழ்உகூஉம் அந்நெல்லே சாலும்

கரிகாலன் காவிரிசூழ் நாடு’ (Subramaniyan, 2010)

## முடிவுரை

மனித இனம் இனக்குழுக்களாக வாழ்ந்த காலத்தில் வீரமும், மரமும் சார்ந்த ஓர் அரசியலையும், அரசாட்சையயும் முன்வைத்து வாழ்ந்து வந்தார்கள் என்பது நாம் அறியமுடிகிறது.

ஆனால் இன்றைய அரசுமுறை என்பது பல சமூகங்கள் அல்லது வர்க்கங்களை உள்ளடக்கிய ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியானது மைய அமைப்புடைய அரசாங்கத்தின் மூலம் வரிவிதித்தல், படைத்திறன் கொண்டிருத்தல், சட்டங்களை இயற்றி அவற்றின்படி அனைவரையும் நடக்கச் செய்தல், குற்றம் மிழைப்போர்க்கு நீதித்துறையின் மூலம் தண்டனை விதித்தல் முதலான பணிகளைக் கொண்ட 'உரிமை மறுப்பு' அமைப்பினைக் கொண்ட அரசாகச் செயல்படுகிறது. இனக்குழு சமுதாயங்களில் அரசியல் முறை சார்ந்தும், சாராத போக்கிலும், காணப்படுவதோடு அடிப்படையில் மனித சமுதாயத்தின் அதன்படி மலர்ச்சிக் காலத்தின் தொடக்கத்தில் உறவினையே அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது. மற்ற சங்க இலக்கியங்களில் எல்லாம் வளவனையும், அவனுடைய வீரத்தையும் ஏதாவது ஒரு செய்யுளில் இடம்பெற பொருநராற்றுப்படை மட்டும் தான் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு அவனுடைய அரசாட்சியையும், வளத்தையும் பற்றி எடுத்துரைக்கிறது. அக்காலத்தில் மனிதகுலம் இனக்குழுக்களாக வாழ்ந்த போது செயல்படுத்திய அரசியல் முறைமைகளை அரசாட்சியின் பண்புகளையும் பின்பற்றினால் நல்லதொரு சமூகம் தழைத்தோங்கி வளரும் என்பது திண்ணம்.

## References

Bhakthavatsala Bharathi, (2010) Panpattu Manudaviyal, Adaiyalam veeliyedu, Tirchy, India.

Pillai, K.K., (2009) Tamizhaga Varalaru Makkalum Panpadum, Internaional Institute of Tamil Studies, Chennai, India.

Subramaniyan, S. V. (2010) Sanga Ellakiyam, Ettu Thogai, Saratha Publication, Chennai, India.

Varatharasan, M. (1972) Tamil Ilakkiya Varalaru, Paari niliyam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License